இன்றைய வேளாண் செய்திகள்

29.10.2012 P.M

30.10.2012 A.M

29th oct 2012 P.M

**50 சதவீத மானியத்தில் அவரை , முருங்கை விதைகள்**

அண்ணாகிராமம் வட்டாரப் பகுதி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் செடி அவரை, செடி முருங்கை விதைகள் விநியோகிக்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.பிரேமா தெரிவித்துள்ளார்.

÷அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது.

÷செடி அவரை ஒரு கிலோ ரூ.330 அடைப்புக்குறியில் மானிய விலை (ரூ.165), செடி முருங்கை ஒரு கிலோ ரூ.500 (ரூ.250), கத்தரி விதை பாலூர்-2 ரூ.600 (ரூ.300) என்ற விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.÷இத்திட்டத்தின் கீழ் விதைகளைப் பெற்று பயனடையுமாறு வி.பிரேமா விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேரழுகல் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை**

பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தியில் ஏற்பட்டு வரும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த வேண்டும் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் பீ.டி பருத்தியானது அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. அண்மையில் பெய்த மழையால் பருத்தி வயல்களில் மழை நீர் தேங்கி நிற்கிறது. இதனால் பருத்தி செடிகளில் வேர் அழுகல் நோய், இலைப்புள்ளி நோய், இலைக்கருகல் நோய் ஆகியவை ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், பல பகுதிகளில் பருத்தி செடிகள் அதிக சப்பைகளுடனும், சில பகுதிகளில் 20 முதல் 30 நாள்கள் வயதுடைய செடிகளாகவும் காணப்படுவதால், இவற்றில் நோய் தாக்குதல்

ஏற்படும்போது பருத்தி மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். அதிக நாள்களுக்கு பருத்தி வயலில் மழை நீர் தேங்கும்போது, செடிகளில் உடற்செயலியல் மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டால் சிகப்பு இலை அதிகளவில் தாக்கி, செடிகளின் இலைகள் சிவப்பாக மாறி கீழே விழும் தன்மை ஏற்படும்.

எனவே, வயலில் தேங்கியுள்ள மழை நீரை பத்து வரிசைகளுக்கு இடையே வாய்க்கால் பறித்து வெளியேற்ற வேண்டும். பருத்தி செடிகளானது வாடிய நிலையில் காணப்படும் போது, அதை பிடுங்கி பார்த்து வேர் அழுகல் நோய் இருக்கும் பட்சத்தில் அதாவது, வேர்கள் அழுகி வேரின் மேல் பகுதி முழுவதும் அழுகியும், தண்டு பகுதி மட்டும் மஞ்சள் நிறத்துடன் காணப்படும்போது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் டிரைகோடெர்மா விரிடி என்ற உயிரியல் பூஞ்சாணக் கொல்லி அல்லது 1 கிராம் கார்பண்டாசிம் என்ற ரசாயன பூஞ்சாணக் கொல்லி மருந்தை கரைத்து, வேர் அழுகல் நோய் தாக்கியுள்ள செடிகளுக்கு அருகில் உள்ள மற்ற அனைத்து பருத்தி செடிகளுக்கும், வேர் பகுதியில் ஊற்றி கட்டுப்படுத்தலாம்.

அல்லது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2 கிலோ டிரைகோடெர்மா விரிடியை 100 கிலோ மட்கிய மாட்டு எருவுடன் கலந்து, செடிக்கு செடி இட்டால் வேர் அழுகல் நோய் வராமல் பாதுகாக்க முடியும். மழையின் காரணத்தால் இலைப்புள்ளி மற்றும் இலைக்கருகல் நோயின் அறிகுறிகள் பருத்தி செடியின் இலைகளில் தென்படும் சமயத்தில், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்ஸி குளோரைடு மற்றும் 0.1 கிராம் ஸரெட்டோமைசின் சல்பேட் ஆகியவற்றை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை நேரில் அல்லது, 9944244582 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 65.56 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 65.56 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 2,446 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து வினாடிக்கு 930 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 245 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை

## நவ. 3- ல் கால்நடை சிறப்பு முகாம்

பெரம்பலூர் மாவட்டத்தில் நவ. 3-ம் தேதி அன்று, விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட்ட 36 ஊராட்சிகளில் இலவச குடற்புழு நீக்க சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில், விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 4 ஆடுகள் வீதம் 2011-12-ம் ஆண்டு 954 பயனாளிகளுக்கு 3,816 ஆடுகளும், 2012-13-ம் ஆண்டில் அக்டோபர் வரை 19 ஊராட்சிகளில் 1,628 பயனாளிகளுக்கு 6,512 ஆடுகளும் என 10,328 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், இதுவரை 2,874 குட்டிகள் ஈன்றுள்ளன. சிறந்த முறையில் ஆடுகளை பராமரிக்க பயிற்சி அளித்தல், நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விளக்கம் அளித்தல், பிறக்கும் குட்டிகளை பராமரித்தல் குறித்து பயனாளிகளுக்கு பயிற்சி அளிப்பதோடு, 3 மாதத்துக்கு ஒருமுறை குடற்புழு நீக்கப்பணி, நோய் தடுப்பூசி போடுதல், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆடுகளை விற்காமல் முறையாக பராமரிப்பது குறித்த அறிவுரைகளும் கால்நடை உதவி மருத்துவர்கள் குழுவினர் செய்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் உடல் எடை மற்றும் நோய் எதிர்ப்பு தன்மையை அதிகரிக்க சிறப்பு குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது. 2011-12- ம் ஆண்டு ஆடு வழங்கிய அந்தூர், அயனாபுரம், அகரம்சீகூர், அகரம், அம்மாபாளையம், அல்லிநகரம், அய்யலூர், அருணகிரிமங்கலம், அன்னமங்கலம், அனுக்கூர், அசூர், ஆலம்பாடி, ஆண்டி குரும்பலூர், ஆடுதுறை,ஆதனூர், புஜங்கராயநல்லூர், பிரம்மதேசம் ஊராட்சிகளிலும், 2012-13-ம் ஆண்டில் ஆடுகள் வழங்கிய எறையூர், எலந்தலப்பட்டி, பொம்மனப்பாடி, செட்டிகுளம், அத்தியூர், கை.களத்தூர், சத்திரமனை, எளம்பலூர், எழுமூர், எலந்தங்குழி,இருர்,கண்ணப்பாடி, காரியனூர், காடூர், கூடலூர், கீழப்பெரம்பலூர், கீழப்புலியூர், காரை, கீழமாத்தூர் ஆகிய 36 ஊராட்சிகளிலும் குடற்புழு நீக்க சிறப்புமுகாம் நடைபெறுகிறது.

இந்த ஊராட்சிகளில், பிற ஆடுகளுக்கும் குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது.

## கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை

அரியலூர் மாவட்டத்தில் கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்தால், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பருவமழை தொடங்கி உள்ளதையொட்டி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நெல்,

மக்காச்சோளம், கரும்பு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு உரமிடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளுக்கு உரத்தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கூட்டுறவு சங்கங்களில் யூரியா 465 டன், டி.ஏ.பி 326 டன், பொட்டாஷ் 198 டன், காம்ப்ளக்ஸ் 276 டன்னும், தனியார் கடைகளில் யூரியா 155 டன், டி.ஏ.பி 138 டன், பொட்டாஷ் 181 டன், காம்ப்ளக்ஸ் 645 டன் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உர மூட்டையில் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் விற்க வேண்டும். கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வோர் மீது, நடவடிக்கை எடுக்கப்படும். உரம் இருப்பு வைத்து கொண்டு இல்லை எனவும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்வோர் குறித்து அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் 96552 46331, வேளாண் அலுவலர் 96552 46335 அல்லது 04329 228056, 228074 ஆகிய தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். அனைத்து வட்டாரங்களிலும் உர விநியோக கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. வட்டார அளவில் அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் 95855 18920, ஆண்டிமடம் 94867 55252, ஜயங்கொண்டம் 96552 46341, திருமானூர் 96552 46340, செந்துறை 95855 18920, தா.பழூர் 94427 03620 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## விவசாயிகள் சங்க வட்டார மாநாடு

தமிழ்நாடு விவசாயிகள் சங்க அகஸ்தீசுவரம் வட்டார மாநாடு சுசீந்திரத்தில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் முத்துக்குமார் தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஆறுமுகம்பிள்ளை சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், பால் தலைவராகவும், சுப்பாராம் செயலராகவும் மற்றும் 15 பேர் கொண்ட வட்டாரக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சுசீந்திரம் பெரிய பாலத்துக்குப் பதிலாக, புதிய பாலம் கட்ட வேண்டும்.

அணை திறக்கப்பட்டு கடைவரம்புப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

## உரங்கள் விற்பனையைக் கண்காணிக்க வட்டார அளவில் சிறப்புக் குழுக்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் உரங்கள் பதுக்கல் மற்றும் கூடுதல் விலைக்கு விற்பனை போன்றவற்றை தடுத்திட வட்டார அளவில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கி. செப்ந்திரராஜன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இம் மாவட்டத்தில் பிசான பருவ சாகுபடி அனைத்து வட்டாரங்களிலும் நடைபெற்று வருகிறது. சாகுபடிக்கு தேவையான இடுபொருள்கள், உரங்கள் சீராக கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தனியார் உர விற்பனை நிலையங்களில் உரங்களின் விலைப்பட்டியல் மற்றும் இருப்பு குறித்து அறிவிப்பு பலகைகள் வைத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உரங்களைப் பதுக்குதல், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல் போன்றவற்றை தடுத்திட வட்டார அளவில் உர ஆய்வாளர், வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோர் அடங்கிய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

தனியார் உர விற்பனை நிலையங்களில் விவசாயிகள் உரங்களை வாங்கும் போது உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலையை கவனித்து அந்த விலைக்கு மிகாமல் வாங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மூட்டைகளில் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச விலைக்கும் கூடுதலாக விற்பனை செய்திடும் உர விற்பனை நிலையங்கள் குறித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும். உரங்களை விற்பனை செய்யும் போது விற்பனை ரசீது வழங்கிட வேண்டும். விற்பனை ரசீது வழங்கிடும் போது தவறாமல் அதில் விவசாயியின் கையொப்பம் வாங்கி, விற்பனை செய்திட வேண்டும்.

தனியார் உர விற்பனையாளர்கள், உரங்களின் விலைப்பட்டியல், உர இருப்பு குறித்து விற்பனை நிலையத்தில் விளம்பரப் பலகைகள் வைத்திட வேண்டும். உரங்களை நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு விற்றாலோ, விலைப்பட்டியல் குறித்து விளம்பரப் பலகைகள் வைக்கப்படாமல் இருந்தாலோ உரக்கட்டுப்பாடு ஆணை 1985-ன் படி உர விற்பனை உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படுவதுடன், காவல் துறை மூலம் நடவடிக்கை எடுத்து, உர விற்பனையாளர்கள் மீது சட்டப்பூர்வமாக வழக்குப் பதிவு செய்ய நேரிடும் என்றார் அவர்.

## மழை : முன்னெச்சரிக்கை நடவடிக்கையை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும் : வானிலை ஆய்வு மையம்

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்திருப்பதால் தமிழகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் இரு நாள்களுக்கு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நாமக்கல் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த மையம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்திருப்பதால் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் பலமாகவும், உள் மாவட்டங்களில் பரவலாகவும் காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

நாமக்கல் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களிலும் தொடர்ந்து இரு நாள்கள் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதால் வேர்கடலை மற்றும் அறுவடைக்குத் தயார் நிலையிலுள்ள பயிர்களின் நிலத்தில் மழைநீரை உடனடியாக வெளியேற்றவும், வடிகால் வசதி ஏற்படுத்தவும் விவசாயிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதனால், வேர்கடலைகள் முளைத்து சேதமாவதைத் தடுக்க முடியும்.

அறுவடை செய்து வைக்கப்பட்டுள்ள வெங்காயம் மற்றும் தீவனச் சோளப் பயிர்கள் மழையில் நனைந்துவிடாமல் இருக்க பாலித்தீன் விரிப்புகளைக் கொண்டு மூடி பாதுகாக்க வேண்டும். ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் மற்றும் கோழிகள் ஆகியவையும் மழையால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பான இடங்களில் பராமரிக்க வேண்டும்.

தவிர, கோழிப் பண்ணைகளில் உயர்மனைகளின் கீழ் இரு பக்கமும் வடிகால் வசதி செய்து மழைநீர் தேங்குவதைத் தடுப்பதன் மூலம் கோழி எருவுடன் மழைநீர் கலந்து அதிகப்படியான அமோனியா வாயு மற்றும் ஈக்கள் உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்த முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் : இன்று விழிப்புணர்வுப் பிரசாரம்

ஆம்பூர் வட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் நவம்பர் 5 ஆம் தேதி தொடங்கி 5 நாள்கள் நடைபெறும் என ஆம்பூர் வட்டாட்சியர் கே. விமலா மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் ஜெயக்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஆம்பூர் வட்டத்தில் உள்ள அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர்களின் அலுவலகத்தில் நல உதவிகளை பெறுவதற்காக பயனாளிகள் மனுக்களை அளிக்கலாம்.

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து நிவாரண உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகளை பெறுவதற்கு பயனாளிகள் அளிக்கும் மனுக்கள் மீது பரிசீலனை செய்து தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நல உதவிகள் வழங்கப்படும்.

அதே போல உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராவதற்கும் அதற்கான ஆவணங்களுடன் மனுக்கள் அளிக்கலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

முகாம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஆம்பூர் வட்டத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற உள்ளது.

## "வேளாண் பொருள் பதனிடல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் '

வேளாண் பொருள்கள் பதனிடல் தொழில்நுட்பப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை கொடுவள்ளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் தே. தியாகராஜன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அறுவடைக்குப் பின் தானியங்கள், காய்கறிகள் பதப்படுத்துதல், பழப் பொருள்கள் மற்றும் மசாலா வகைகள் தயாரிப்பு, விற்பனை வாய்ப்புகள், தரக்கட்டுப்பாடு உள்பட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும்.

ஆர்வமுள்ள விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், படித்த இளைஞர்கள் இதில் கலந்துகொள்ளலாம். இப்பயிற்சிக்கு நவம்பர் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கவேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 044 27680214, 94441 55312, 94448 120657 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

## கொடிய நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவித் தொகை : ஆட்சியர்

கொடிய நோயால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மாதாந்திர நிவாரணத் தொகை வழங்கப்படும் எனக் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் லி.சித்ரசேனன் தெரிவித்துள்ளார்.

÷அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் சிறப்புத் திட்டமாக மாதம் ரூ.1000 நிவாரணத் தொகை வழங்க முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

÷இதன்படி, கொடிய நோய்களான புற்று நோய், எய்ட்ஸ், காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 60 வயது நிரம்பிய ஆதரவற்றவர்களுக்கு சிகிச்சை காலத்திற்கு தற்காலிக நிவாரணமாக மாதம் ரூ.1000 வழங்கப்படும்.

÷எனவே தகுதி உள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தின் அனைத்து பகுதியில் உள்ள ஆண், பெண்

இருபாலரும் சம்மந்தப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரை அணுகி உரிய படிவத்தில் பூர்த்தி செய்து பயன் அடையலாம் எனச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விலையில்லா மாடு , ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை நவம்பர் 3-ல் நடைபெறுகிறது**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழக அரசின் சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விலையில்லா மாடு, ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க சிறப்பு முகாம் நவம்பர் 3-ம் தேதி நடைபெறுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2011-12-ம் ஆண்டில் 700 கறவை பசுக்களும், 19,784 ஆடுகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2012-13-ம் ஆண்டில் 700 பேருக்கு விலையில்லா கறவை பசுக்களும், 6,960 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளும் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

மருத்துவப் பரிசோதனை முகாம்: விலையில்லா ஆடு, மாடுகளைப் பெற்ற பயனாளிகள் அவற்றை நன்கு பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், விலையில்லா மாடு, ஆடுகளின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் நவம்பர் 3-ம் தேதி கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறுகிறது.

எனவே, விலையில்லா மாடு, ஆடுகள் பெற்ற பயனாளிகள் மட்டுமன்றி அனைத்து விவசாயிகளும் இந்த முகாமை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

தொடக்க விழாவில் அமைச்சர்: மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறும் இம் முகாமை காணலாபாடி கிராமத்தில் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடங்கி வைக்கின்றனர்.

**தக்காளி விலை சரிவு !**

தக்காளி விலை கடுமையாகச் சரிந்துள்ளதால் பல்லடம் வட்டார விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பல்லடம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில், ஆடிப் பட்டத்தில் நடவு செய்யப்பட்ட தக்காளி இப்போது காய்ப்புக்கு வந்துள்ளது. பருவமழை தொடங்கியுள்ள போதிலும், இன்னும் தீவிரமடையவில்லை.

இதனால் தக்காளிச் செடிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை.÷இதனால் தக்காளி விளைச்சல் வழக்கம்போல் இருந்து வருகிறது. மேலும், வெளியூர் தக்காளி வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால், நாட்டுத் தக்காளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.÷கடந்த வாரம் ரூ. 120-க்கு விற்ற ஒரு பெட்டி (டிப்பர்) தக்காளி, இந்த வாரம் ரூ.90-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. பொதுவாக விளைச்சல் குறைந்து, விலை உயரும் மழைக் காலத்தில், விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதால் தக்காளி விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் : ஆட்சியர் தகவல்**

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி:
தமிழக முதல்வரின் உழவர் பாகாப்புத் திட்டம்- 2011ன் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் குடும்பத்தினர் நலத்திட்ட உதவிகளைப் பெறலாம்.

இந்தத் திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த திங்கள்கிழமை முதல் நவ. 3-ம் தேதி வரை துண்டுப் பிரசுரங்கள், விளம்பரத் தட்டிகள் மூலம் பிரசாரம் மேற்கொள்ளப்பட உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் இந்த நாள்களில் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, இயற்கை மரணம், விபத்து மரணங்களுக்கு உதவித்தொகை, காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித்தொகை ஆகியவை இத்திட்டத்தில் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தகுதியுள்ள உறுப்பினர்கள் கிராம நிர்வாக அலுவலர்களிடம் நவம்பர் 5ம் தேதி முதல் நவம்பர் 9ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். ரேஷன் அட்டையின் நகல், மாணவ, மாணவியர் கல்வி உதவிதொகை பெற கல்வி பயிலும் நிறுவன முதல்வரால் வழங்கப்பட்ட சான்று, முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்கான உதவிதொகைகள் அனைத்தும் நவம்பர் 30ம் தேதிக்குள் பயனாளிகளுக்குக் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

30.10.2012 A.M

**அரிசி ஏற்றுமதியில் தாய்லாந்தை விஞ்சியது இந்தியா**



புதுடில்லி: நடப்பு 2012ம் ஆண்டில், இதுவரையிலுமாக மேற்கொள்ளப்பட்ட அரிசி ஏற்றுமதியில், தாய்லாந்தை பின்னுக்கு தள்ளி, இந்தியா முதலிடத்தில் உள்ளதாக, அமெரிக்க வேளாண் துறை தெரிவித்து உள்ளது.சென்ற 2011ம் ஆண்டில், தாய்லாந்து நாட்டின் அரிசி ஏற்றுமதி, 1.06 கோடி டன்னாக இருந்தது. அதேசமயம், நடப்பாண்டில் இதுவரையிலுமாக, இந்நாட்டின் அரிசி ஏற்றுமதி, 65 லட்சம் டன் என்ற அளவிலேயே உள்ளது.சென்ற 2011-12ம் வேளாண் பருவத்தில் (ஜூன்-ஜூலை), இந்தியாவில் பருவ மழை நன்கு பெய்தது. இதன் விளைவாக, இந்தியாவின் நெல் உற்பத்தி, சாதனை அளவாக, 10.43 கோடி டன்னை எட்டியது. இதனால், நடப்பாண்டில், இதுவரையிலுமாக, இந்தியாவின் அரிசி ஏற்றுமதி, 17.50 லட்சம் டன் உயர்ந்து, 97.50 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.இதைத் தொடர்ந்து, வியட்நாம் (70 லட்சம் டன்), தாய்லாந்து (65 லட்சம் டன்), பாகிஸ்தான் (37.50 லட்சம் டன்), அமெரிக்கா (35 லட்சம் டன்) ஆகிய நாடுகள் உள்ளன.நடப்பாண்டில், சர்வதேச அரிசி ஏற்றுமதி, 18.50 லட்சம் டன் உயர்ந்து, 3.77 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், இந்தியாவின் பங்களிப்பு அதிக அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இதே ஆண்டில், சர்வதேச அரிசி உற்பத்தி, 46.48 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என, அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**எண்ணெய் வித்துக்கள் ; சாகுபடியில் சுணக்க நிலை**



புதுடில்லி: நாட்டின், பல பாகங்களில், நடப்பு ரபி பருவத்தில், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி, மிகவும் சுணக்கமாக உள்ளது என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவ மழை பொழிவில் ஏற்பட்ட தாமதத்தால், சென்ற செப்டம்பர் மாதத்துடன்

முடிவுற்ற கரீப் பருவத்தின், அறுவடை பணிகள் இன்னும் முடிவடையவில்லை. இதன் காரணமாக, ரபி பருவ, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு குறைந்து உள்ளதாக தெரிய வந்துள்ளது.நடப்பு அக்டோபர் 25ம் தேதி வரையிலுமாக, 8.37 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேசமயம், கடந்த ரபி பருவத்தின் இதே காலத்தில், 20.15 லட்சம் ஹெக்டேரில், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின், வட மாநிலங்களில், ரபி பருவத்தில், கடுகு மற்றும் சூரிய காந்தி போன்ற எண்ணெய்வித்துக்கள், அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. கணக்கீட்டு காலத்தில், கடுகு எண்ணெய் வித்துக்கள் சாகுபடி, 6.71 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டின், இதே காலத்தில், 18.55 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதுகுறித்து சமையல் எண்ணெய் உற்பத்தியாளர், சங்கத்தின் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், "கரீப் பருவ சாகுபடி பின்னடைவால், ரபி பருவ எண்ணெய் வித்துக்கள் சாகுபடியும் பின் தங்கியுள்ளது. மேலும், விவசாயிகள், சாதகமான பருவ நிலைக்காக காத்துள்ளனர். அடுத்த ஓரிரு வாரங்களில், எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் விறுவிறுப்பு ஏற்படும்' என்றார்.நாட்டின், பல பாகங்களில், நெல் உள்ளிட்ட இதர தானியங்கள் அறுவடையில், காலதாமதம் ஏற்பட்டு உள்ளது. இதுவும், எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில், பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.இந்நிலையில், மத்திய அரசு, எண்ணெய் வித்துக்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை,இன்னும் அறிவிக்கவில்லை. இதுகுறித்த அறிவிப்பு வெளியான பிறகே, இவற்றின் சாகுபடி குறித்து முடிவு எடுக்கப்படும் என, விவசாய அமைப்பை சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டார்.

## தேனீ வளர்ப்பை ஊக்கப்படுத்த தோட்டக்கலை தீவிரம்

காரைக்குடி :விவசாயிகளிடையே தேனீ வளர்ப்பை ஊக்குவிக்க தோட்டக்கலை துறை சார்பில், தேனீக்களுடன் கூடிய பெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

விவசாயம் சார்ந்த கூடுதல் வருமானத்திற்கு தேனீ வளர்ப்பு முக்கியமானதாக உள்ளது. ஒரு பெட்டி தேனீயில், ஆண்டு ஒன்றுக்கு 20 கிலோ வரை தேன் எடுக்கலாம். ஒரு கிலோ சுத்தமான தேன் 300 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தமிழ்நாடு கதர் கிராம வாரியம் சார்பில், தேனீ வளர்ப்பு பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. 1991-92ல் தமிழகம், தேனீ வளர்ப்பில், முதலிடத்தில் இருந்தது. அதன்பிறகு ஒருவகை வைரஸ் தாக்குதலால், தேனீ வளர்ப்பு பெரிதும் நலிவுற்றது. இந்நிலையில், தோட்டக்கலை மூலம், விவசாயிகளிடையே தேனீ வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான விண்ணப்பங்கள், அந்தந்த ஒன்றியங்களில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் பெறப்படுகிறது. முதல்கட்டமாக ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் 10 முதல் 30 பெட்டிகள் வரை வந்துள்ளது.

ஒவ்வொரு பயனாளிக்கும், நான்கு பெட்டிகள் மற்றும் அதற்குரிய தேன் கூட்டுடன் சேர்ந்து, வழங்கப்பட உள்ளன. இதற்கான, பயிற்சியும் தோட்டக்கலை துறைமூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. சாக்கோட்டை ஒன்றியத்துக்கு தேனீ வளர்ப்புக்கு என 10 பெட்டிகள் வந்துள்ளன.

## பட்டு விவசாயிகளுக்குமருத்துவ முகாம்

கிருஷ்ணகிரி: தமிழ்நாடு பட்டுவளர்சிதுறை மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ., லம்பார்டு நிறுவனம் சார்பில், வேப்பனப்பள்ளியில் பட்டு விவசாயிகளுக்கான மருத்துவ முகாம் நடந்தது.தமிழ்நாடு அரசு பட்டுவளர்ச்சி துறையில் பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் மகளிர் பட்டு விவசாயி குடும்பத்தினர் அனைவருக்கும் ஐ.சி.ஐ.சி.ஐ., லம்பார்டு நிறுவனம் மூலம் இலவச மருத்துவ காப்பீடு செய்துள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரை மருத்துவ செலவினங்களை திரும்ப பெறும் வசதி செய்யப்பட்டதுள்ளது.இத்திட்டத்தின் கீழ், வேப்பனப்பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. முகாமை கிருஷ்ணகிரி பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் கதிர்வேலு தொடங்கி வைத்தார்.

முகாமில், வேப்பனப்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இருந்து, 200 மகளிர் மற்றும் அவர்களது குடும்பத்தை சேர்ந்த பட்டு விவசாயிகள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர்.இதில், 113 வவிசாயிகளுக்கு ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு கண்டறியப்பட்டு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. அனைத்து விவசாயிகளுக்கும் கண் பரிசோதனை செய்யப்பட்டு, 94 பேருக்கு குறைபாடுகள் உள்ளது கண்டறியப்பட்டு

கண்கண்ணாடிகள் வழங்கப்பட்டது. 16 பேருக்கு இருதய பரிசோதனை செய்யப்பட்டு தகுந்த மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது.தொழில் நுட்ப சேவை மைய ஆய்வாளர் மணிவண்ணன் நன்றி கூறினார்.

## சிறு விவசாயிகளுக்கான தொகையை உயர்த்த நடவடிக்கை

குன்னூர்:"சிறு விவசாயிகள் மேம்பாடுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை, 600 கோடி ரூபாயாக உயர்த்த மழை கால கூட்டத்தொடரில் வலியுறுத்தப்படும்,' என சிறு தேயிலை விவசாயிகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. தேயிலை வாரியம், உபாசி மற்றும் தென்னிந்திய சிறு தேயிலை விவசாயிகள் சார்பில் தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் மாநாடு குன்னூர் உபாசி அரங்கில் நேற்று நடந்தது.

தேயிலை வாரிய தேயிலை மேம்பாட்டு உதவி இயக்குனர் தியோரி வரவேற்றார். தேயிலை வாரிய தலைவர் பானு தலைமை வகித்தார். காஞ்சிபுரம் எம்.பி., விஸ்வநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது;இந்தியாவில் தேயிலை உற்பத்தி 91 கோடி கிலோவிலிருந்து 119 கோடி கிலோவாக உயர்த்த வேண்டும். இதில் சிறு விசாயிகளின் பங்கு 26 சதவீதமாகும். 12ம் ஐந்தாவது திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகள் மேம்பாடுக்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை 600 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும். இதை மழை கால கூட்டத்தொடரில் வலியுறுத்துவேன். சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட தனி இயக்குனரகத்தில் அதிகாரிகளை உடனடியாக நியமிக்க வேண்டும். தேயிலை பயிரிடப்படும் கூடலூர், கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் கருத்தரங்கங்கள் நடத்த வேண்டும். இவ்வாறு விஸ்வநாதன் பேசினார். மாநாட்டில் தேயிலை வாரிய உறுப்பினர்கள் கோஷி பேபி, டாக்டர் ராமு, உபாசி பொது செயலாளர் உல்லாஷ் மேனன், சிறு தேயிலை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் நன்றி கூறினார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ்ஓய்வூதியம் : கலெக்டர் அழைப்பு

கரூர்: "உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தால், மாத உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:காசநோய், புற்றுநோய், ஹெச்.ஐ.வி., (எய்ட்ஸ்) மற்றும் இதர உயிர்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்டு, தற்காலிகமாக செயலிழந்த நிலையில் உள்ள, உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு, மாதாந்திர ஓய்வூதிமாக 1,000 ரூபாய் வழங்க, தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்அதன்படி, மேற்கண்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ள உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்கள், பதிவு பெற்ற அரசு டாக்டர்களின் சான்றிதழ் பெற்று, மாவட்ட கலெக்டர், டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., தனி தாசில்தார் ( சமூக பாதுகாப்புத் திட்டம்) மற்றும்

வி.ஏ.ஓ.,க்கள் ஆகியோரிடம் விண்ணப்பித்து, உடனடியாக மாத ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம்.

**மானிய விலையில் வெண்டைவிதைகள் : அதிகாரி அழைப்பு**

கரூர்: "விவசாயிகளுக்கு, 50 சதவீத மானிய விலையில் வெண்டை விதைகள் வழங்கப்படுகிறது' என, க.பரமத்தி வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:வெண்டைக்காய் எந்த பருவத்தில் வேண்டுமானாலும் பயிர் செய்யக்கூடிய முக்கிய பயிர். வெண்டை பயிர் குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய பயிராகும். நல்ல வடிகால் வசதியுள்ள எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். நல்ல உரச்சத்துள்ள மண்ணில் மிகவும் நன்றாக வளரும்.தற்போது, தோட்டக்கலை அலுவலகத்தில் யு.எஸ்., 7109 வீரிய ஒட்டுரக விதைகள் உள்ளது.

இந்த ரக விதைகள், விதைத்த, 40 முதல், 45 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். பாசன நீரின் தன்மையை பொறுத்து காய்கறின் நீளம் இருக்கும். ஏக்கருக்கு, 10 முதல், 12 டன் மகசூல் கிடைக்கும்.தற்போது சந்தை விலை கிலோவுக்கு, 15 முதல், 20 ரூபாய் வரை இருப்பதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். வெண்டை விதையை விவசாயிகள், 50 சதவீத மானிய விலையில் வாங்க, க.பரமத்தி தோட்டக்கலை அலுவலர்களை நேரில் அணுகலாம்.

**முதல் கட்ட நிலுவை தொகை வழங்கல் கரும்பு அறுவடையில் விவசாயிகள் தீவிரம்**

ஆர்.கே.பேட்டை : முதல் கட்ட நிலுவை தொகை வழங்கியதை அடுத்து, ஆர்.கே.பேட்டை பகுதி விவசாயிகள், அரவை பருவத்திற்கு தயாராக உள்ள கரும்புகளை வெட்டி, ஆலைக்கு அனுப்பும் பணியில், தீவிரமாக உள்ளனர்.
கடந்த ஆண்டு, அரவை பருவத்திற்கு அனுப்பிய கரும்புக்கு பணம் வழங்காத நிலையில், கரும்பு விவசாயிகள் தற்போதைய அரவை பருவத்திற்கு, 15ம் தேதி, கரும்பு வெட்டு ஆணை பெற்றனர். எனினும், பணம் கிடைக்குமா என்ற சந்தேகத்தில் அறுவடையை துவக்காமல் தவித்து வந்தனர். இந்நிலையில், 20ம் தேதி, நிலுவை தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என, திருவாலங்காடு, கூட்டுறவு சர்க்கரை ஆலையை, விவசாயிகள் முற்றுகையிட்டனர். அதை தொடர்ந்து, முதல் கட்டமாக, 40 விவசாயிகளுக்கு, 10 லட்சம் ரூபாய் காசோலையை, ஆலை நிர்வாகி பாஸ்கர் வழங்கினார். 10 நாட்களுக்குள் அனைத்து விவசாயிகளுக்கும் நிலுவைத் தொகை வழங்குவதாகவும் அறிவித்தார்.
இதையடுத்து, ஆர்.கே.பேட்டை, ராஜாநகரம், ஸ்ரீகிருஷ்ணாபுரம் மற்றும் சுற்றியுள்ள விவசாயிகள், அரவை பருவத்திற்கு தயாராக உள்ள கரும்புகளை வெட்டி, ஆலைக்கு அனுப்பும் பணியில், தீவிரமாக உள்ளனர்.
இதுகுறித்து, கரும்பு விவசாயி குமார் கூறுகையில், ""கடந்த அரவை பருவத்தில் அனுப்பிய

கரும்புக்கே இன்னும் பணம் கிடைக்காத நிலையில், ஆலை நிர்வாகத்துடன் ஏற்பட்ட உடன்பாட்டின்படி தற்போது கரும்புகளை வெட்டி ஆலைக்கு அனுப்பி வருகிறோம்," என்றார்.

## மரவள்ளி கொள்முதல் நிலையம் விவசாயிகள் கோரிக்கை

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கராபுரம் பகுதியில் பொய்குனம், குளத்தூர், நெடுமானூர், அரசம்பட்டு, பாலப்பட்டு, புதுப்பட்டு, லக்கினாய்கன்பட்டி, சோழம்பட்டு உள்ளிட்ட பல கிராமங்களில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்படுகிறது. முள்வாடி, ரோஸ், குங்குமரோஸ், பாண்டி ஆகிய ரகங்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன.தற்போது மரவள்ளியில் அமோக விளைச்சல் ஏற்பட்டு ஏக்கருக்கு 200 முதல் 250 மூட்டைகள் வரை கிடைக்கிறது. டன் 3000 ரூபாயிலிருந்து 4000 வரை விலை போகிறது.அறுவடை செய்யப்பட்ட மரவள்ளி கிழங்குகளை லாரிகள் மூலம் தலைவாசல், ஆத்தூர், சேலம் சென்று விற்பனை செய்வதால் போக்கு

வரத்து செலவு, வீண் அலைச்சல் ஏற்படுகிறது.எனவே சங்கராபுரம் பகுதியில் பல்வேறு கிராமங்களில் அதிக அளவு பயிர் செய்யப்படும் மரவள்ளி கிழங்குகளை பெற்றுக்கொள்ள நேரடி கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## மாவட் ட கலெக்டர் தகவல் உழவர் பாதுகாப்பு சேர்க்கை துவக்கம்

நாமக்கல்: "உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் சேர்க்கைக்கான மனுக்கள், நவம்பர், 5ம் தேதி முதல், 9ம் தேதி வரை பெறப்படும்' என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:உழவர் பாதுகாப்பு திட்டத்தில், உறுப்பினர்களாக உள்ள சிறு, குறு விவசாயிகள், விவசாயக் கூலி குடும்பங்களில் உள்ளவர்களுக்கு திருமணம், கல்வி, முதியோர் உதவித் தொகை, இயற்கை விபத்து உதவித்தொகை, மகப்பேறு உதவித் தொகை உள்ளிட்டவை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கேன்சர், காசநோய் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை பெற்று வரும் காலங்களில், அரசு மருத்துவ சான்றின்படி, மாதம், 1,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.இந்த திடத்தில் உறுப்பினராக சேர, ஐந்து ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு மேற்படாமலும், 2.50 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு மேற்படாமலும் உள்ள விவசாயி, விவசாய கூலித் தொழிலாளர்கள் தகுதியுடையவர்களாவர். இத்திட்டத்தில் உறுப்பினராக சேர, ரேஷன் கார்டு அவசியம்.

தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, கோழிப்பண்ணைத் தொழிலில் ஈடுபடுவோரும், இத்திட்டத்தில், தங்களை உறுப்பினர்களாக சேர்த்து, பதிவு செய்து கொள்ளலாம். அக்டோபர், 29ம் தேதி முதல், 30ம் தேதி வரை, இத்திட்டம் பிரச்சார வாரமாகவும், நவம்பர், 5ம் தேதி முதல், 9ம்

தேதி வரை, கோரிக்கை மனு பெறும் வாரமாகவும் அனுசரிக்கப்படுகிறது.
ரேஷன் கார்டு இருந்தும், தங்களை உறுப்பினராக பதிவு செய்யாத விவசாய குடும்பத்தை சேர்ந்த அனைவரும், தங்களது கிராம வி.ஏ.ஓ.,வை அணுகி உறுப்பினராக பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாழைத்தார் விலை சரிவால் விவசாயிகள் பெரும் கவலை**

ப.வேலூர்: ப.வேலூர் தினசரி வாழை மார்க்கெட்டில், வாழைத்தார் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் அதன் சுற்றுவட்டாரங்களான, பரமத்தி, பொத்தனூர், நன்செய் இடையாறு உள்ளிட்ட காவிரிக் கரையோர கிராமங்களில், 5,000 ஏக்கர் பரப்பளவில், வாழை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூவன், ரஸ்தாளி, மொந்தன் உள்ளிட்ட வாழை ரகங்கள் பயிரிடப்படுகிறதுஅவ்வாறு பயிரிடப்படும் வாழை, ப.வேலூர் பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள தினசரி வாழை மார்கெட்டுக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு வரும் வியாபாரிகள், வாழைக்கு விலை நிர்ணயம் செய்து எடுத்துச் செல்வர்.

இந்நிலையில், கடந்த வாரம், 400 ரூபாய்க்கு, ஒரு தார் பூவன் வாழை விற்பனை செய்யப்பட்டு வந்தது.தற்போது, அதிகபட்சமாக, 225 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதுபோல், 575 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு தார் ரஸ்தாளி ரக வாழை, தற்போது, 250 ரூபாயாக குறைந்துள்ளது. ஐந்து ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்ட ஒரு மொந்தன் வாழை, தற்போது, மூன்று ரூபாயாக குறைந்துள்ளது.திருமணம், பண்டிகை சீஸன் இல்லாததே, இதற்கு முக்கிய காரணம் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். தீபாவளி பண்டிகை வரை, வாழை விலையில் சரிவு இருக்கும். அதன் பின்னரே விலையேற்றம் காணும் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். வாழை விலையில் ஏற்பட்டுள்ள திடீர் சரிவு, விவசாயிகளை கவலையடைச் செய்துள்ளது.

**யானைகளால் சேதம்விவசாயிகளுக்கு நிவாரணம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், யானைகளால் பயிர் சேதமடைந்த, 25 விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து, 45 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டை வனச்சரகம் மேல் மலை காப்பு காட்டில் இருந்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன் வெளியேறிய இரண்டு யானைகள் மேல்மலை சுற்றியுள்ள கிராமங்களில் புகுந்து விவசாய பயிர்களான வாழை, கரும்பு, நெல், ராகி, தக்காளி போன்ற பயிர்களை சேதப்படுத்தியது.விவசாய பயிர்களை யானைகள் சேதப்படுத்தியதற்கு கடந்த செப்டம்பர், 4ம் தேதி ஆறு விவசாயிகளுக்கு, 42 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டது. யானைகளால் பயிர் சேதமடைந்த மேலும் 25 பேருக்கு, ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தொகையை கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் நாள்

கூட்டத்தில், கலெக்டர் பூஜா குல்கர்னி வழங்கினார்.டி.ஆர்.ஓ., பிரகாசம், சமூக பாதுகாப்பு திட்ட துணை கலெக்டர் மஞ்சுளா, வனவர் சக்திவேல், வனக்காப்பாளர் முருகேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை**

தூத்துக்குடி:உரங்கள் அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை உரிமம் ரத்து செய்யப்படும் என தூத்துக்குடி மாவட்ட வேளாண் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தூத்துக்குடி மாவட்டத்தில் பயிருக்கு தேவையான மழை சீராக பெய்து கொண்டிருப்பதால் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்களில் இருப்பு வைத்து தட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் டி.ஏ.பி.பொட்டாஷ், காம்பிளக்ஸ் மற்றும் யூரியா உரங்கள் விவசாய பணிகள் நடக்கும் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அனுப்பப்பட்டுள்ளது.

விவசாயிகள் எந்த உரம் வாங்கினாலும், உரம் வாங்கும் விற்பனை நிலையங்களில் பில் கேட்டு வாங்க வேண்டும். விற்பனை நிலையங்களில் விவசாயிகளுக்கு தெரியும்படி விற்பனை பலகையில் இருப்பு மற்றும் விற்பனை விலை தினமும் குறிப்பிட்டு பராமரிப்பு வேண்டும், மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த உரங்கள் வெளிமாவட்டத்திற்கு அனுப்பினாலும், உரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டு உரியவர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும், உரம் சம்பந்தமான பிரச்னை ஏதுவாக இருந்தாலும் வேளாண்மை உதவி இயக்குநர் மதியழகன் தூத்துக்குடி கைபேசி எண். 9443656811க்கு தொடர்பு கொள்ளலாம் என தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தனராஜ் தெரிவித்துள்ளார்.

**உரத்தை பதுக்கினால் நடவடிக்கை**

சிவகங்கை : ""சிவகங்கை மாவட்ட உரக்கடைகளில், விவசாயிகளுக்கு வழங்காமல் உரங்களை பதுக்கினால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என,விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை தெரிவித்தார்.அவர் கூறியதாவது:மாவட்டத்தில்,பருவமழை தொடங்கியதால், விவசாய பணிகள் நடக்கிறது.இதற்காக,தேவையான யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு உள்ளது.இது தவிர, உரக்கடைகளிலும், அரசு நிர்ணயித்த விலையில், விவசாயிகளுக்கு உரங்கள் வழங்கப்படுகிறதா, என கண்காணிக்க,பறக்கும் படை நியமிக்கப்பட்டுள்ளது.கூடுதல் விலைக்கு உரங்களை விற்றால், கடை "லைசென்ஸ்' ரத்து செய்வதோடு, நடவடிக்கை எடுக்கப்படும்,என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.10.2012 P.M

30.10.2012 A.M

**உலக அளவில் அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடம்**



புதுடெல்லி : நடப்பாண்டில் அரிசி ஏற்றுமதியில் உலக அளவில் இந்தியா முதலிடம் பிடித்தது. அமெரிக்க அரசின் வேளாண்மை துறை, பல்வேறு நாடுகளின் வேளாண்மை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி குறித்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிடுகிறது. சர்வதேச அளவில் அரிசி ஏற்றுமதி குறித்து அந்த துறை தற்போது வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலக அளவில் அரிசி ஏற்றுமதியில் தாய்லாந்து நாடு முன்னிலையில் இருந்து வந்தது. கடந்த 2011ம் ஆண்டில் தாய்லாந்து 106.5 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்தது. அதற்கு அடுத்த நிலையில், இந்தியா 80 லட்சம் டன் ஏற்றுமதி செய்திருந்தது. ஆனால், 2012ம் ஆண்டில் தாய்லாந்து நாட்டின் அரிசி ஏற்றுமதி, 65 லட்சம் டன்களாக குறைந்து விட்டது. அதே சமயம், இந்தியாவில் இருந்து இது வரை 97.5 லட்சம் டன் அரிசி ஏற்றுமதியாகி உள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் அரிசி ஏற்றுமதியில் உலக அளவில் இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக, வியட்நாம் 70 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்திருக்கிறது. 3வது இடத்தில் தாய்லாந்து உள்ளது.

அதைத் தொடர்ந்து, 4வது இடத்தில் உள்ள பாகிஸ்தான் 37.5 லட்சம் டன்னும், 5வது இடத்தில் உள்ள அமெரிக்கா 35 லட்சம் டன்னும் ஏற்றுமதி செய்துள்ளன.

## கும்பகோணத்துக்கு 2,625 டன் யூரியா வருகை



கும்பகோணம் : காவிரி டெல்டா மாவட்டங்களில் 5 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி துவங்கியுள்ளது. இதற்காக, சீனாவில் இருந்து யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டது. ஆந்திராவின் கிருஷ்ணா பட்டணத்திற்கு வந்த உரம், 2,625 டன் மூட்டைகளாக கட்டப்பட்டு, சரக்கு ரயிலில் கும்பகோணத் திற்கு அனுப்பப்பட்டது. கும்பகோணத்தில் இருந்து உரமூட்டைகள், 150 லாரிகள் மூலம் தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள 250 உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நெல் வயல்களில் நெரிஞ்சில் பூக்கள் கால்வாய் பாசன விவசாயிகள் கண்ணீர் விதை முளைப்பு திறன் குறையும் அபாயம்

கால்வாய் நீரை கொண்டு நெல் பாசனம் செய்வதையே வழக்கமாக கொண்டுள்ள இந்த பகுதி விவசாயிகள் மக்காசோளம், ராகி, சோளம் போன்ற மாற்று பயிர் செய்வதில்லை. திடீரென கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டால் மாற்று பயிரை அழித்து மீண்டும் நெல் நடவு செய்ய நேரிடுமே என அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். கால்வாய் திறக்கப்படுமா? இல்லையா? என வேளாண்மைத்துறை அதிகாரிகளாலும் உறுதியாக சொல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று வேளாண்மைத்துறையும் முன்கூட்டியே திட்டமிட்டு உரம் விதைகளை இருப்பு வைத்துள்ளது. ஒருவேளை கால்வாயில் தண்ணீர் திறக்கப்படாவிட்டால் இருப்பு வைத்துள்ள விதைகளின் முளைப்பு திறன் குறைந்து போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பள்ளிபாளையம்,: கிழக்கு கரை கால்வாயில் தண்ணீர் திறந்து விடாததால் நெல் விளையும் வயல்களில் நெரிஞ்சி பூத்து கிடக்கிறது. இந்த ஆண்டு கால்வாய் பாசனம் கானல் நீராகி விடுமோ என விவசாயிகள் அச்சப்படுகின்றனர்.

மேட்டூர் கிழக்கு கரை கால்வாய் நீரால் பள்ளிபாளையம், குமாரபாளையம் மற்றும் வழியோர கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் நெல் பயிரிடுவார்கள். நெல் விளைந்த பின்னர் அணையில் போதிய தண்ணீர் இருக்குமானால் எள்ளும் பயிரிடப்படும். இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்து வந்தது.

இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லை. தஞ்சை டெல்டா விவசாயிகள் நெல் பயிரை காப்பாற்ற போராடி வருகின்றனர். தஞ்சை பாசனத்துக்கு தண்ணீர் பற்றாத நிலையில் கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. கர்நாடகாவில் மழைக்கான பருவம் மாறிவிட்டது. மழை பெய்த போதே தண்ணீர் தராத கர்நாடகா இனியா தரப்போகிறது என்ற சோர்வு விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது. இதனால், சுமார் 10 ஆயிரம் ஏக்கர் கால்வாய் பாசன பூமி நெரிஞ்சி பூத்து தரிசாக கிடக்கிறது. கால்நடைகளுக்கு வைக்கோலும், உணவுக்கு அரிசியும் இந்த ஆண்டு பற்றாக்குறை ஏற்படும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அரிசி விலை உயரும்

தஞ்சை டெல்டா பகுதியிலும் இந்த ஆண்டு எதிர்பார்த்த நெல் மகசூல் இருக்காது. கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் இல்லாததால் சுமார் 30 ஆயிரம் டன் நெல் விளைச்சல் குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என குமாரபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவர் வேல்முருகன் தெரிவித்தார். கர்நாடகாவில் பருவமழை நின்று விட்டது. தமிழ்நாட்டில் பெய்யும் பருவமழையால் தான் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வர வேண்டும். ஒருவேளை அணையில் போதிய தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டு கால்வாய் திறக்கப்படாவிட்டால் நெல் விளையாது. விவசாயிகள் வெளி மாநிலங்களில் இருந்து அதிக விலை கொடுத்துத்தான் அரிசி வாங்க வேண்டும். இதனால், அரிசி விலை சுமார் 50 சதம் உயர்ந்து போகும் வாய்ப்பு உள்ளது என அவர் தெரிவித்தார்.

**வாழை , காய்கறியில் கூடுதல் மகசூல் பெற வேளாண் அறிவியல் நிலையத்தில் நுண்ணூட்ட கலவை தயார்**

நாமக்கல்,: வாழை, காய்கறி மற்றும் மஞ்சளில் கூடுதல் மகசூல் பெற வேளாண் அறிவியல் நிலையத்தில் நுண்ணூட்ட கலவை விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வாழை, காய்கறி, மற்றும் மஞ்சள் நுண்ணூட்ட கலவை விற்பனைக்கு தயாராக உள்ளது. இதை பயன்படுத்துவதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கும். பயிர்களின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுவதுடன் விளை பொருட்களின் நிறம் மற்றும் தரம் உறுதி செய்யப்படுகிறது.

காய்கறிகளின் பூ உதிர்வது தவிர்க்கப்படுகிறது. வாழை நுண்ணூட்ட கலவையை திசு வளர்ப்பு மற்றும் அனைத்து ரகங்களுக்கும் பயன்படுத்தலாம். விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்து நுண்ணூட்ட கலவை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விலையில்லா கறவை மாடு , ஆடுகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் 3ம் தேதி நடக்கிறது**

நாமக்கல்,: நாமக்கல் மாவட்டத்தில் விலையில்லா கறவை மாடு, ஆடுகளுக்கு வரும் 3ம் தேதி மருத்துவ பரிசோதனை முகாம் நடக்கிறது.

நாமக்கல் மாவட்டத்தில் கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழுநீக்க முகாம் வரும் 3ம் தேதி நடக்கிறது. தமிழக அரசின் திட்டமான விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில் 100 கறவை பசுக்களும் மற்றும் 2906 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 100 பயனாளிகளுக்கு இலவச கறவை பசுக்கள் மற்றும் 2733 பயனாளிகளுக்கு இலவச வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், வரும் 3ம் தேதி, கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள வருவாய் கிராமங்களில் இந்த

முகாம் நடைபெறும். முகாமை திருச்செங்கோடு தாலுகா கலியனூர் கிராமத்தில் தொழில்துறை அமைச்சர் தங்கமணி தொடங்கி வைக்கிறார்.

## வாத்து முட்டை தட்டுப்பாடு ; ரூ8 ஆக விலை உயர்வு

பரமத்திவேலூர்,: பரமத்திவேலூர் வாத்து முட்டைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மருத்துவ குணம் கொண்டது என்பதால் மக்கள் கூடை கூடையாக வாங்கிச் செல்கின்றனர். இதனால், விலை உயர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் காவிரி ஆற்று படுகையில் வளர்க்கப்படும் வாத்துகளின் இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு கடும் கிராக்கி காணப்படுகிறது. சேலம், கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கார் உள்ளிட்ட வாகனங்களில் வருபவர்கள் காவிரி ஆற்றங்கரையோரம் உள்ள வறுவல் கடைகளில் வாத்துக்கறி சாப்பிட்டு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

தற்போது, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் வாத்து முட்டையின் தேவை அதிகரித்துள்ளது. கடைகளில் விற்பனை செய்யப்படும் வாத்து முட்டைகளை கூடை கூடையாக வாங்கிச் செல்கின்றனர். இதனால், விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ரூ5க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சை முட்டை, நேற்று ரூ7 ஆக விலை உயர்ந்தது. ரூ6க்கு விற்பனை செய்யப்பட்ட அவித்த முட்டை ரூ8 ஆக விலை உயர்ந்தது.

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது: பரமத்திவேலூர் பகுதியில் காவிரி ஆற்றங்கரையோரம் வளர்க்கப்படும் வாத்துகளின் இறைச்சி மற்றும் முட்டைக்கு அசைவ பிரியர்களிடையே மிகுந்த வரவேற்பு காணப்படுகிறது. இதில் மருத்துவ குணம் உள்ளதாக மக்கள் நம்புகின்றனர். முட்டைகளை அவித்து, மிளகுத்தூள் தூவி சாப்பிட்டால் குழந்தைகளுக்கு நெஞ்சு சளி, இருமல் போன்ற நோய்கள் குணமாகும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால் நாமக்கல், கரூர், மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து வந்து அவித்த முட்டை, பச்சை முட்டைகளை வாங்கிச்செல்கின்றனர். சீதோஷ்ணநிலை மாற்றத்தால் வாத்து முட்டை விற்பனை சூடுபிடித்துள்ளது. வாங்குவோரின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. வாத்து முட்டை தொடர்ச்சியான இருமல், கக்குவான் இருமலை குணமாக்கும் தன்மை கொண்டது. இதன் மஞ்சள் கருவை குழந்தைகளுக்கு கொடுத்தால் சளியை வெளியே கொண்டு வந்து விடும் என்பதால் அதிகம் பேர் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இவ்வாறு வியாபாரி தெரிவித்தார்.

இதனால், பரத்திவேலூரில் நேற்று வாத்து முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டது.

## விவசாயிகளுக்கு இழப்பீடு

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யானைகளால் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிவாரண உதவித்தொகை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் யானைகளால் விவசாய பயிர்கள் பெரிதும் சேதமடைந்தது. அவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் பூஜா குல்கர்னி நேற்று இழப்பீட்டுத் தொகை வழங்கினார். மொத்தம் 25 பேருக்கு கி1 லட்சத்து 41 ஆயிரத்து 500 க்கான காசோலைகளை அவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம், சமூக பாதுகாப்பு திட்ட துணை ஆட்சியர் மஞ்சுளா, வனவர் சக்தி வேல், வனக்காப்பாளர் முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தேன்கனிக்கோட்டையில் ரூ12.5 லட்சத்தில் நீர்தேக்க தொட்டி அமைக்க பூமி பூஜை

தேன்கனிக்கோட்டை, :தேன்கனிக்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட 16வது வார்டு தேர்பேட்டை பகுதிக்கு, சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட தரை தள தண்ணீர் தொட்டி மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் தேர்பேட்டை, தொட்டி பகுதிகல் வளர்ச்சி அடைந்துள்ளதால், அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ12.50 லட்சம் மதிப்பில், 60ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி யை கட்ட, பேரூராட்சி நிர்வாகம் முடிவு செய்தது. இப்பணிக்கான பூமி பூஜை யை, பேரூராட்சி தலைவர் நாகேஷ் தொடங்கிவைத்தார். இதில் பேரூராட்சி துணைத் தலைவர் ராமன், வார்டு உறுப்பினர்கள் கோத ண்ட ராமன், கிருஷ்ணமூர்த்தி, ஜெயபால், நாராய ணன், ராமமூர்த்தி, முனிவெங்கடப்பா, ஒப்பந்ததாரர் பழனி சாமி, ஸ்ரீராமன், மாதேஷ், ராமன், கோபி மற் றும் பலர் கலந்து கொண்டனர்.

29th oct 2012 P.M

## நவ .3ல் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

விருதுநகர், :கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நவம்பர் 3ல் நடக்கிறது.

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் சிவநாதன் விடுத்துள்ள அறிக்கை: விருதுநகர் மாவட்டத்தில் இலவச கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை

பெருக்கவும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் நவம்பர் 3ம் தேதி கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை நடக்கிறது. அன்றைய தினம் வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

**விதைகளை ?பாதுகாப்பாக ?சேமிக்க வழிகாட்டுகிறது ?விதை ?ஆய்வுத்துறை**

விருதுநகர், : விதைகளை பாதுகாப்பாக சேமிக்க விதை ஆய்வுத்துறை விவசாயிகளுக்கு யோசனை வழங்கியுள்ளது.

இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணப்பிரசாத் விடுத்துள்ள அறிக்கை:

விதைகள் காற்றிலுள்ள ஈரப்பதத்தை கிரகிக்கும் தன்மை உடையவை. காற்றின் ஈரத்தன்மை அதிகமுள்ள கடலோரப்பகுதிகள் மற்றும் நதிக்ரைகளில் விதைகளை சேமிக்க ஈரக்காற்று புகாத பைகளை உபயோகிக்க வேண்டும். இதற்காக விதைகளை 700 அடர்த்தி உள்ள பாலிதின் பைகளை பயன்படுத்த வேண்டும்.

விதைகளை கிடங்குகளில் சேமித்து வைக்கும்போது சாக்கு பைகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கும்போது 6 அல்லது 7 வரிசைக்கு மேல் அடுக்கக்கூடாது.

மேல் உள்ள மூடைகளின் பாரம் அடியிலுள்ள மூடைகளை போட்டு அழுத்துவதால் அடிமூடையிலுள்ள விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்க வாய்ப்புள்ளது. விதை மூடைகளை வெறும் தரையின் மீது அடுக்கி வைப்பதை தவிர்க்க வேண்டும். அதேபோல் சுவற்றின் மீது சாய்த்து அடுக்குவதையும் தவிர்க்க வேண்டும்.

இதனால் தரை மற்றும் சுவர்களில் உள்ள ஈரப்பதம் ஊடுருவி விதைகளை பாதிப்படைய செய்யும். எப்போதும் விதை மூடைகளை மர பலகைகள் அல்லது தார்ப்பாய் விரித்து அவற்றின் மீது அடுக்கி வைக்க வேண்டும் என, அவர் தெரிவித்துள்ளார்.

**தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் நெல் ?விவசாயிகளுக்கு ?மானியம்**

மானாமதுரை, : நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு, தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட உள்ளதாக வேளாண் துறை அறிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வேளாண் அலுவலர் முத்துமீனாள் கூறியிருப்பதாவது:

மானாமதுரை வட்டாரத்தில் ராபி பருவத்தில் நெல் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்காக 250 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் 80 டன்னும், வேளாண் விரிவாக்க மையத்தில் 20 டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர

மானாமதுரை, முத்தனேந்தல் பகுதியில் உள்ள மூன்று தனியார் விற்பனை மையங்களில் 25 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விதைநெல் பெறும் விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.5 மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் அருகேயுள்ள அரசு, தனியார் விதைநெல் மையங்களை அணுகி மானிய விலையில் விதை நெல்லைப் பெறலாம்.

ராபி பருவத்தில் வேளாண் துறையின் திட்டங்கள் குறித்து விவசாயிகள் தெரிந்துகொள்ள அந்தந்தப் பகுதிக்குட்பட்ட வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

இது தொடர்பாக வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ள...

வீரபாண்டியன் (பெரியகோட்டை) 97885 40535

பாண்டியம்மாள் (மானாமதுரை) 98653 14473

மலையப்பன் (செய்களத்தூர், மல்லல்) 90928 88978

முருகேசன் (முத்தனேந்தல்) 96777 21789

இளையராஜா (ஆத்மா திட்ட மேலாளர்) 91596 51458

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.10.2012 A.M**

**வருங்கால சந்தை நிலவரத்தை அறிந்து**
**பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வாய் பு**
**முன்கூட்டியே விலையை தெரிந்து கொள்ள ஏற்பாடு**

வருங்காலசந்தை நிலவரத்தை அறிந்து அதற்கேற்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய் ம் வகையில் தமிழக அரசின் வேளா மைத்துறை சார்பில் அடுத்த ஆ டு விலை நிலவரங்களை முன்கூட்டியே தெரிவிக்க ஏற்பாடு செய்ய பட்டுள்ளது.

விலை கிடைக்காமை

இந்திய விவசாயத்தில் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமையால் விவசாயி கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். விவசாயிகளின் தலையாய பிரச்சினையே விலை கிடைக்காமை தான். ஒரே பயிரை அனைத்து விவசாயிகளும் பயிரிடுவதாலும், சந்தையில் ஏற்படும் தேவைக்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்யாததாலும் விவசாயிகளுக்கு உரியவிலை கிடை பதில்லை.

இதை தடுக்க வருங்கால சந் தை நிலவரம், விலை நிலவரம், என்னென்ன பயிர்களுக்கு தேவை இருக்கும் என்பதை அறிந்து அதற்கேற்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய் ம் வகையில் தமிழக அரசின் வேளா மை விற்பனை மற்றும் வணிகத்துறை, கோவை யில் உள்ள தமிழ்நாடு வேளா மை பல்கலைக் கழ கம் ஆகியவை ஏற்பாடுகளை செய்துள்ளன.

இதன்படி தமிழகம் முழு வதும் உள்ள முக்கிய நகர்களில் உள்ள ஒழுங்கு முறை விற்ப னைக்கூடங்களில் பெரிய அளவிலான எலக்ட்ரானிக் திரைகள் அமைக்க பட்டு ஒவ்வொரு பயிருக்கும் கடந்த ஆ டில் என்ன விலை, நட பு ஆ டில் என்ன விலை, அடுத்த ஆ டில் என்ன விலை இருக்கும் என்பது தொடர்பான தகவல் கள் தொடர்ந்து ஒளிபர ப பட்டு வருகின்றன.

இரு பு வைக்க ஏற்பாடு

நெல், மக்காச்சோளம், கோதுமை, சோளம், உருளைக் கிழங்கு, பருத்தி, மஞ்சள் உள்ளிட்ட அனைத்து முக்கிய பயிர்களுக்கும் விலை நிலவரங்கள் ஒளிபர பட்டு வருகின்றன. வேளா மை பல்கலைக்கழகமும், தேசிய தகவல் மையமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய் துள்ளன. தி டுக்கல் மாவட்டத்தில் பழனி மற்றும் தி டுக்கல்லில் இந்த எலக்ட்ரானிக் திரைகள் அமைக்க பட்டுள்ளன.

இந்த ஆ டு விலை குறைவாக இருந்து அடுத்த ஆ டு விலை கிடைக்க வாய் புள்ளதாக கருத படும் விளைபொருட்களை இரு பு வைத்து வைத்து விற்பனை செய்யவும் வேளா மை விற்பனைத்துறை ஏற்பாடு செய்துள்ளது. பொருட்களை இரு பு வைக்கும் விவசாயிகளுக்கு 5 சதவீத வட்டியில் ரூ.2 லட்சம் வரை கடன் வழங்க படுகிறது என்று தி டுக்கல் வேளா மை விற்பனைக்குழு செயலாளர் சையது இ ராகிம் தெரிவித்தார்.